உ



இலங்கை யாழ் பலாலியை பிறப்பிடமாகவும்,
கோண்டாவில் கிழக்கை வாழ்விடமாகவும்,
கொழும்பில் வசித்து வந்தவருமான

அமரர்.

# சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம்

அவர்களின்

# நினைவு மலர்

03.06.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நீங்காத நினைவு கொண்ட

எங்கள் அன்புத் தெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்

பண்பின் இலக்கணமாய்

பொறுமையின் சிகரமாய்

கடமைக்கோர் உதாரணமாய்

கணவன் என்ற சொல்லுக்கு இலக்கணமாய்

பாசத்திற்கு ஓர் தந்தையாய்

அன்புடன் எமை வழிநடத்தி வாழ்வித்த

எங்கள் அன்புத் தெய்வத்தின் திருப்பொற்பாதங்களில்

இம் மலரினை காணிக்கையாக்குகின்றோம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில் 23 - 09 - 1942

விண்ணில் 04 - 05 - 2012

# அமரர். சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம்

திதி நிர்ணய வெண்பா

புதுமைமிகு நந்தன வருடம் சித்திரைத் திங்கள்
வளர்பிறை திரயோதசி திதியில் - விளங்குபுகழ்
பலாலியூர் சிவசுப்பிரமணியம் எனும் பொன்மகன்
ஈசன் தாழ் சேர்ந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்.

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

கூற்றா யினவாறு விலக் ககலீர்
கொடுமை பலசெய் தனநான னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற்றின் அகம்படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தஎம் பரனே
 புற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவ்புரத் தரசே
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன
 ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
 வருகவென் றருள்புரி வாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
 நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
 வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
 அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணிகொடிஎம் ஈசனே உன்னைத்
 தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
 நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
 தூர் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
 உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
 பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகாபோற்றி மறுசமயங் கண்மாலப்
பேதகஞ்செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பிரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே.
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவ ன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னில்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் யல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் தீவின் வடக்கே அமைந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது வடஈழம், இவ் வட தமிழ் ஈழத்தில் பண்புடைய மக்கள் பல்லோர் வாழ்ந்து எண்புகழ் பரப்பி காலம் காலமாய் கற்றோர் உயர்ந்து சீலம் போற்றிய சீவபூமி என்று நம் முன்னோரால் போற்றிப் புகழப் பெற்ற யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கில் அமைந்துள்ளது பலாலி எனும் கிராமம். இக்கிராமம் விவசாயத்தில் புகழ்பெற்று விளங்கியது. வடமாகாணத்தின் விமான நிலையமும் கூட அமைந்ததால் புகழ் பெற்ற ஊர்.

பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவர் அவ்வூரைச் சேர்ந்த சின்னப்பிள்ளையை மணந்ததன் பலனாக சோமசுந்தரம் அவதரித்தார். இவருக்கு பலாலியை சேர்ந்த சிதம்பரப்பிள்ளை + தெய்வானைப்பிள்ளையின் புத்திரி செல்வ பாக்கியத்தை மணம் முடித்துக் கொடுத்தனர். வையத்து வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும். என்ற வள்ளுவன் வாக்குப்படி வாழும் காலத்து மூத்த புதல்வனாக அமரர் உயர்திரு **சிவசுப்பிரமணியம்** அவர்கள் புரட்டாதித் திங்கள் 23ம் நாள் 1942ம் வருடம் இவ்வுலகில் அவதரித்தார். பெற்றவர்கள் ஆனந்த கூத்தாடினர். தந்தை வழி மாமி காமாட்சி தனது மருகனைப் பார்த்து பூரித்தார். தாய் வழி சிறிய தாய்மார்கள் அன்னமுத்து, செல்லாச்சியும் தாய் மாமன்மார்கள் செல்லையாவும், நடராசாவும் தங்கள் முதல் மருமகனைப் பார்த்து பேரானந்தம் அடைந்தனர். அமரர் சிவசுப்பிரமணியத்திற்கு பின் முறையே கந்தசாமி(காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற), பட்டு என்றழைக்கப்படும் காலம் சென்ற சிவசண்முக வடிவேல், ராஜராஜேஸ்வரி, கலியுகவரதன் (சந்திரன் -ஜேர்மனி), ஈஸ்வரன் ஆகியோர் பிறந்து வளர்ந்தனர்.

காலங்கள் கடந்தன, பள்ளிப் பருவம் வந்தது. ஆரம்பக் கல்விக்காக பலாலியிலுள்ள சித்திவிநாயகர் வித்தியாசாலையில் இவரை பெற்றோர் சேர்த்தனர். தரம் 5 வரை இப்பாடசாலையில் கல்வி பயின்ற இவரை பின்னர் வசாவிளான் மத்தியமகா வித்தியாலயத்திலும், உயர் கல்விக்காக யாழ் மத்திய கல்லூரியிலும் இணைத்து இவருக்கு கல்வி அறிவினை ஊட்டினர். உயர் கல்வியில் தேர்ச்சி அடைந்தார் அமரர். காலங்கள் கடந்தன. வேலை தேடி தனது 21வது அகவையில் கொழும்பு மாநகரத்துக்கு அமரர் வந்தார். சிறிது காலம் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றி பின்னர் தனது 23ம் வயதில் N.Vaitilingam & Co ல் சேர்ந்தார். இவரது கடுமையான உழைப்பின் காரணமாக இவரைத் தேடி உயர் பதவிகள் தானே வந்தன.

பெற்றோர் இவருக்கு மணம் செய்து வைக்கத் தீர்மானித்தனர். இவரின் அழகையும், பண்பையும் கண்டு மணம் கேட்டு வந்தனர் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் (operation மணியம்) இராசம் தம்பதியினர். தங்களது ஏக புத்திரி யோகராணியை(தேவி) மணம் செய்து வைக்கத் தீர்மானித்தனர். அமரர் சிவசுப்பிரமணியம் அவர்களோ அழகு தேவதை தேவி யின் அழகில் மயங்கி திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார். அதன் பலனே பெற்றோர் திருமணம் பேசி முடித்தனர். தைத்திங்கள் 17ம் நாள் 1971ம் வருடம் பெற்றோர், உற்றார், உறவினர் புடைசூழ இவர்களது திருமணம் இனிதே நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவன் காட்டிய வழியில் இல்லற வாழ்க்கையை கோண்டாவில் கிழக்கிலும், கொழும்பிலுமாக இனிதே கழித்தனர். இல்லறம் நல்லறமாக அமைந்த வேளையில் மூத்த புதல்வனாக சுவர்ணராஜ் (ராஜன்) பின்னர் முறையே சர்மிளா (ராஜி), நிமல்ராஜ் (நிமல்) கடைக்குட்டியாக கபில்ராஜ் (கபில்) இவ்வுலகில் அவதரித்தனர். கற்பனைக் கனவோடு வளர்த்த பிள்ளைகள் தமது தாய் தந்தையர் கண்டது கனவல்ல நிஜம் என்று உறுதி செய்தனர். ராஜன் கல்வியை முடித்து HEMAS நிறுவனத்தில் பணியாற்றியதை இட்டு பூரிப்படைந்தார் அமரர். இவருக்கு கரவெட்டியைச் சேர்ந்த ஆயித்தர் + திரவியம் தம்பதியினரின் புத்திரி கலைநங்கை தர்மினியை மணம் செய்து கொடுத்தனர். இதன் பலனே தக்ஷா, பிரணீத் எனும் முத்துக்கள் பிள்ளைகளாகப் பிறந்தனர். இவர்கள் புகழோடும், பேரோடும் கனடாவில் வாழ்கின்றதை எண்ணி பெருமை கொள்வார்.

ஆசைமகள் ராஜி சுப்பையா + மீனாம்பாள் தம்பதியினரின் மகன் விக்னேஸ்வரனை மணந்து சிந்துஜா, துசாந் எனும் செல்வங்களைப் பெற்று HOLLAND நாட்டில் வாழ்வதை எண்ணி ஆனந்தம் அடைந்தார். சிங்கக் குட்டி நிமல்ராஜ் கமலநாதன் + பூமலர் தம்பதியரின் மகளான மணிமொழியைக் கரம்பிடித்து வருண், வினய், விகாஷ் ஆகிய மாணிக்கங்களைப் பெற்று இலண்டன் மாநகரில் வாழ்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். கடைக்குட்டி கபில் இலண்டன் சென்று கோண்டா வில் கிழக்கைச்சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் நடேசலிங்கம் + லோசினி தம்பதியரின் புதல்வி தர்ஷிகாவை மணம் முடித்து மருஷ் எனும் புத்திரனைப் பெற்று வாழ்வதைக் கண்டு பூரிப்படைந்தார்.

பிள்ளைகளைப் பிரிந்து தானும் தனது மனைவியும் தனியே வாழ்வதையிட்டு சிறிது கவலைகொண்டாலும் அவர்களுடன் Skype மூலமும் தொலைபேசி மூலமும் உரையாடி சந்தோஷம் அடைந்தார். தான் இனி சம்பாதித்தது போதும் என்று எண்ணி தனது 47 வருட சேவையின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காளர் (Accountant) பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் ஓய்வு பெற்ற பின் தனது மனைவியுடன் தனது பிள்ளைகள் இருக்கும் ஊர்களுக்குச் சென்று தனது காலத்தை தனது பேரக் குழந்தைகளுடன் செலவிடுவார். கனடாவுக்கு வரும் போதெல்லாம் தனது உறவினர் உற்றாருடன் கூடி மகிழ்வதில் மிகவும் விருப்புடையவர். அது போலவே கொழும்பிலும் உற்றார் சுற்றம் வெளிநாடு செல்ல பல உதவிகளைப் புரிந்தவர். உதவி கேட்டு வருவோர்க்கு மறுதலிக்காத மனம் கொண்டவர். இவர் தனது மக்களைப் பார்க்க London, Holland செல்லும் போதெல்லாம்அங்கே தனது உறவினர்களுடன் கூடி மகிழ்வார்.

கனவுகளுடன் வாழும் காலத்தில் தனது பிள்ளைகள் பேரப் பிள்ளைகளைப் பார்ப்பதற்காக Canada செல்ல ஆயத்த வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது காலம் செய்த கோலமோ, காலன் செய்த கொடுமையோ மாரடைப்பு எனும் வடிவில் இவரது இன்னுயிரை கொழும்பு மாநகரில் வைத்து பறித்துச் சென்று விட்டான்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியார்
அன்புடையார் என்றும் உரியார் பிறர்க்கு

எனும் ஈரடிக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய அமரர் உபசரிப்பு என்ற வார்த்தைக்கு அர்த்தத்தைக் கொடுத்தவர். அன்னாரை இனி எங்கு காண்போம், ஆனாலும் அவர் புகழ் பாடி தினமும் வாழ்வோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நீர் என் துணையாக வேண்டும்

எனக்கு கிடைத்த வரம் என்னை விட்டு
போனதுவே...
என் தாய்க்குப் பின் எனைத் தாலாட்டி
சீராட்ட அரவணைத்தீரே
நீர் இன்று எங்கு சென்றீரோ

அடிக்கடி "ராணி" என்று அழைப்பீரே
"அப்பா" என்னை விட்டுப் போக உமக்கு
மனதும் வந்ததுவே!
அப்பா என்று இனியாரை அன்பு பொழிவேன்
நாம் இருவரும் கனடா செல்ல நீங்கள்
ஆயத்தம் செய்கையில் அந்த காலன்
உமை கபடமாக பறித்துச் சென்று விட்டான்
என்னிடமிருந்து
என்னவரே எனை தனிமரமாய் விட்டு
தூர தேசம் சென்றீரொ

என் தேவைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றிடுவீரே
மீண்டும் வரமாட்டீரோ என் குறை தீர்க்க
பிறப்பொன்று இனி உண்டெனில் மீண்டும்
நானே உன் தாரமாக வேண்டும்

காலங்கள் கடந்தாலும் மாறாது மாறாது
நான் உம்முடன் வாழ்ந்த நல் நினைவு
நீர் எங்கு இருந்தாலும் எனக்கு நல்வழி காட்டுமையா
உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை எப்பொழுதும்
பிரார்த்திக்கும்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

*மனைவி ராணி (தேவி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நினைவுகள்

எமதருமைத் தந்தையே! எமைப் பெற்று சீராட்டி
தாலாட்டி பல வழிகளில் உயர் கல்வியை பயிற்று வித்து
கற்றவர்களும் மற்றவர்களும் மதிக்கும் வகையில் எம்மை
வழி நடத்திய எம் பிதாவே எமையெல்லாம் விட்டு
எங்கு சென்றீர்.

பசுமை நிறைந்த பல சிந்தனைகளைக்கொண்டு பார் போற்றும்
சீலனாகவும் திகழ்ந்து எல்லோர் நெஞ்சங்களிலும் ஆழமான
இடங்களைப் பிடித்து உண்மைக்கு உழைக்கும்
உத்தமராய், நாட்டுப் பற்றாளராய், தங்களை அணுகிய
அனைவர்க்கும் அறிவுப் பசி போக்கிய ஆசானாய்த் திகழ்ந்த
எம் பிதாவே எமையெல்லாம் விட்டு எங்கு சென்றீர்.

தாக்கங்கள் பல வரும் வேளையில் எமக்கு ஊக்கங்கள் பல
கொடுத்தீர் ! நாங்கள் தூர தெசத்தில் வாழ்ந்தாலும்
தொலைபேசி மூலமோ அல்லது "Skype" மூலமோ தொடர்பு
கொண்டு வாரம் தவறாது அறிவுரை கூறுவீரே!
இனி யாரை நாம் நாடுவோம் அறிவுரைக்கு !

எமை நீர் பிரிந்து இறைவனடி சேர்ந்தாலும்
உம் நினைவு எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவுமாகி நின்ற என் அன்பு அப்பா

பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றார்

பொழுதுகள் ஒவ்வொன்றாக விடிந்து கொண்டிருக்கின்றது. யாவும் இயல்பாக நடக்க, அப்பா நீங்கள் இல்லை என்ற வெறுமை என்னால் தாங்க முடியவில்லை. பிள்ளைப் பருவம் முதல் பேணி வளர்த்த உங்கள் கரங்கள் ஓய்ந்தது என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. மரணம் என்பது ஒவ்வொருவருக்கும் உரியது என என்னை நானே சமாதானப் படுத்த முயல்கின்றேன். எனக்கே தெரியும் என்னை நான் ஏமாற்றுகிறேன் என்று, போகும் இடமெல்லாம் என்னைத் தோளிலும், கைகளிலும் ஏந்தித் திரிந்த இளமைப் பருவத்தை எண்ணிப் பார்க்கின்றேன். கை ஆறுவதற்காக என்னை இறக்கிவிடுவதற்கு கூட நான் உங்களை அனுமதிப்பதில்லை. இன்று உங்களைப் பிரிந்து தவிக்கின்றேன். என் கை விலக்கி எப்படி அப்பா நீங்கள் தொலைதூரம் போனீர்கள். உங்களுக்குத் தெரியும் நான் அழுவேன் என்று! எப்படி அதை மறந்தீர்கள் அப்பா! உங்கள் உருவத்தை மனதில் இருத்தி நினைக்கின்றேன். அன்பும் கருணையும் அந்தக் கனிவான வார்த்தைகளும், மென்மையான சிரிப்பொலியும் அசரீரியாக என்னைத் தொடர்கின்றன அப்பா! உங்களை எண்ண எண்ண நீங்கள் எனக்குத் தந்தையாகக் கிடைத்ததையிட்டுப் பெருமை கொள்கின்றேன். கணக்காளராகப் பணியாற்றிய நீங்கள் உங்கள் அலுவலகத்திலும் சரி, வீட்டிலும் சரி, வெளியாருடனும் சரி உங்கள் நற்குணங்களில் ஒன்றான நேரம் தவறாமை, எக்காரியமாயினும் குறித்த நேரத்திற்கு முதலே சமூகமளிப்பீர்கள். என் பள்ளிப் பருவக் காலத்தில் விடியல் பொழுதில் படிப்பதற்கு எழுப்பிவிடுமாறு கூறி நான் நித்திரைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவேன். அலாரம் அடிக்கும் முன்னே என்னை அதிகாலையில் எழுப்புவீர்கள். இப்படி பலபல கடமைகள் செய்தீர்கள். பேரப்பிள்ளைகளில் மிகுந்த அன்பு கொண்டீர்கள். அவர்களை வார்த்தைகளால் கூட நான் கண்டிக்க நீங்கள் அனுமதித்த தில்லை. அவர்கள் வளர்ச்சிகள் ஒவ்வொன்றிலும் பெருமையும், அக்கறையும் செலுத்தினீர்கள். அன்புத்தாத்தாவாக ஆதரவு தந்த கைகளாக உங்களிடம் அரவணைத்து வளர்த்தீர்கள். உங்கள் அன்பினால் அவர்கள் உங்களிடம் உயிராக இருந்தார்கள். பேரப்பிள்ளைகள் கொடுத்து வைத்தவர்கள், உங்கள் அன்பு கிடைத்ததையிட்டுப் பெருமை அடைந்தோம். ஆனாலும் அப்பா நீங்கள் இல்லை என்பதை அந்தச் சின்ன இதயங்கள் எப்படித் தாங்கும். Office appa என்று உங்களைத் தேடுவார்களே என்னால் எப்படி ஆறுதல் சொல்ல முடியும். நினைவுடனே தெய்வமாகிப் போன உங்கள் நினைவுகள் பாதைகளுடன் எங்கள் காலங்கள் இனிக் கழியும். யாவுமாகி நின்ற உங்கள் பேரன்பை மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

*உங்கள் அன்பு மகள்*
*ராஜி*

சாந்தி ! சாந்தி ! சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த துயில் அடைந்து விட்டீர்

அப்பா என்ற வார்த்தைக்கு தேடுகின்றோம்
அர்த்தம் அகராதியில்
அன்புடன் அறிவும் சேர்த்து ஊட்டிய ஆசானே
ஏங்குகின்றோம் உமைத் தேடுகின்றோம்
சிறந்த கணவனாக இனிய தந்தையாக வாழ்ந்த நீர்
இன்று எங்கே தான் சென்றீரோ !

கடமை கண்ணியம் கட்டுப்பாடு இவைகள்தான் உம் செயற்பாடு
இல்லத்து வருவோரை இனிமையுடன் வரவேண்டும்
என்றுரைக்கும் உம் இன் முகத்தை இன்று
தொலைத்து விட்டு ஏங்குகின்றோம்.
பேரக் குழந்தைகளுடன் கூடி நீர் விளையாடும் போது - ஆம்
நீரும் ஓர் குழந்தை தான்.
இன்று தேடுகின்றனர் உம் குழந்தைகள்
அப்பப்பா , அம்மப்பா என்று அழைத்திட ஓடி வந்திடும் நீர்
இன்று தேடுகின்றோம் எங்கும் உமைக் காணவில்லை!

கனடா வரும் ஆவலில் நீர் இருந்தீர்
கனடா வருவீர் என ஆவலில் நாம் இருந்தோம்
வந்ததே ஓர் பேரிடி! இன்னமும் மீளவில்லை அத்துயரில் இருந்து

2012 உலகம் அழியும் என சிலர் ஏங்கி நிற்க - ஆம்
அழிந்துவிட்டது நம் உலகம் உம் இழப்பில்
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்ட உம் நினைவில்
எம் உள்ளமும் இல்லமும் மூழ்கி நின்று ஏங்குதய்யா!
என்றும் உம் ஆத்ம சாந்தி அடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

*மருமக்கள்*
*தர்மினி(கனடா),விக்னேஜ்வரன் (நெதர்லாந்து)*
*மணிமொழி(இங்கிலாந்து), தர்ஷிகா (இங்கிலாந்து)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Office Appa (Grand Papa)

You were the best grand papa that we could imagine. You were always friendly and lovely to us. Office appa you leave a big gap in our family. We miss you a lot, but you always be in our hearts. We love you for ever.

*Your Loving*
*Grand Children*
*Sinthujah, Dushanth*

# Our Loving Appappa

Appappa was one of the most caring and considerate people in our lives. Appappa provided the motivation to the Successes we have had in all areas of our lives. We love you so much appappa and you will be some one we greatly miss.

*With love*
*Grand Children*
*Thaksha, Praneeth,*
*Varun, Vinay, Vikash*
*Maroosh*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல்

பெரியண்ணாவே ! பெரியண்ணாவே !
அண்ணன் உன் அழகுத் திருமுகத்தை
கயவன் காலனவன் கவர்ந்து சென்றுவிட்டானே

அண்ணாவுக்கு அருகில் இருந்து அதிகம்
கூடிக்குலாவ முடியவில்லை ஆனாலும்
ஆறாத் துயரில் விம்மி அழுகின்றோம் நாமிங்கு

வயது ஆகவில்லை ஆயுள் உமக்கு அதிகம்
இருக்குமென்று பெரியண்ணா
நாம் ஆனந்தம் கொண்டோம்
அதற்குள் அண்ணா நம்மை அழவிட்டு
நீர் எங்கு சென்றீர்
கனக்க கதைத்தறியாய் அண்ணா
கதைக்காவிடினும் கவனம் எடுத்திடுவாய் பெரியண்ணா...

பெரியண்ணா... பெரியண்ணா... என
இனி யாரை அழைப்போம்
அன்பை அள்ளிப் பொழிந்த உமை
நாம் என்றும் மறவோம்
உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

*சகோதரர்கள், சகோதரிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு மாமா

எங்கள் எல்வோரையும் அன்பாகவும் ஆசையாகவும் அரவணைத்த எங்கள் மாமா உங்கள் திடீர் மறைவு எங்களை அதிர்ச்சியிலும், மிகப் பெரிய துக்கத்திலும் ஆழ்த்தியுள்ளது. நீங்கள் கனடா வரும் நாள் எண்ணி நாங்கள் காத்திருந்தோம். எங்களை நீங்கள் வாழ்ந்த இடம் அழைத்துவிட்டு நீங்கள் சென்று விட்டீர்கள். வெள்ளிக்கிழமை என்றால் உங்கள் தொலைபேசி அழைப்பிற்காக காத்திருப்போம். நீங்கள் சிரித்துக் கொண்டு Skype இன் ஊடெ வரும் காட்சி தான் கண்முன்னே வந்து போகின்றது. எங்களுக்கு என்ன வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் கேட்டு விட்டு உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லாமலே சென்று விட்டீர்களே. Colombo என்றால் எங்களுக்கு மாமாதான் ஞாபகத்தில் வரும். சுமதி you are in my heart என்று நீங்கள் சொல்லக் கேட்டு ஆனந்தமடைவேன். நீங்கள் எங்கள் அம்மா உங்கள் அக்கா மேல் வைத்த பாசத்தால் அவர்களின் ஆண்டுத் துவசத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று கூறி கடைசியில் அக்காவை நேரில் காண சென்று விட்டீர்களே. உங்கள் பிரிவால் வாடி உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
உங்கள் உடன்பிறவா பெரியக்கா பிள்ளைகள்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

ஸ்ரீ, சுபத்திரா, சுபாசினி, சுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் பிரிவுத் துயர்

பெரியப்பா பெரியப்பா எங்கு நீர் சென்றீரோ
எங்கள் அப்பா மறைந்தாலும்
தந்தை போல் எனைக் காத்து
கல்வியறிவும் ஊட்டினீரே
உம்முடன் நான் வசித்த பொற்காலங்களை
என்றும் நான் மறவேனே
குமரன் குமரன் என்று நீர் அழைப்பது
இன்றும் என் காதில் ஒலிக்கிறது

*உங்கள் பிரிவால் வாடும்*
*உங்கள் அன்புப் பெறாமகன்*
*குமரன்* (Ganakumaran)

## எங்கள் ஆசைப் பெரியப்பா

எமக்கு இருந்த ஆசைப் பெரியப்பா நீங்கள் தானே. உங்களை விட்டு தூர இருந்தாலும் உங்கள் பாசம் எம் நினைவில் ஊஞ்சலாடுகின்றது. கடந்த சில வருடங்களாக நீங்கள் எங்களுடன் மிகவும் நெருக்கமாக பழகினீர்களே. ஆனாலும் இன்றோ எங்களைப் பிரிந்து தொலைதூரம் சென்று விட்டீர்களே. இனி யாரை நாம் பெரியப்பா என்றழைப்பது

உங்கள் ஆத்மசாந்திக்காக
என்றும் பிராத்திக்கும்
பெறாமக்கள்
செந்தில், கலா, வாணி,
கோபிகா, தீபிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சானுக்கு எங்கள் சமர்ப்பணம்

எமது வாழ்வில் மச்சானாக இருந்த போதும் எமைப் பெற்றெடுக்காத ஒரு தந்தை ஸ்தானத்தில் இருந்து எமக்கு அரும் பெரும் உதவிகள் பலவற்றை மனமுவந்து செய்து காலமெல்லாம் எமக்கு துணையாக இருந்தீரே. நாங்கள் தூர தேசத்தில் வசித்து வந்த போதிலும் எம்முடன் மிகவும் அன்பாக குசலம் விசாரித்து அன்புடன் அளவலாவிய பசுமை நிறைந்த நினைவுகள் எமைவிட்டு பிரியாதவாறு பதியவைத்த எனதருமை மச்சானே. நீங்கள் விண்ணுலகில் அமைதியுடன் சாந்தி பெற இவ்வுலகில் பிரார்த்திக்கும் உங்கள்

*மைத்துனர்கள்*

# மருமகள் பிரிவுத்துயர்

எனது அருமை மாமாவே
எனைவிட்டுப் போக மனம்
வந்ததுவே உமக்கு
எங்கள் வீட்டில் வந்து தங்கும் போதெல்லாம்
என்னுடைய ஸ்கூட்டரில் வெளியே வர வெட்கப் படுவீரே
இனி யாரை நான் கூட்டிச் செல்வேன்
உங்கள் பிரிவு எனை மிகவும் வாட்டுகின்றது
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

*மருமகள் சிவரூபி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா போவதாக கூறிவிட்டு கடவுளிடம் போய்விட்டீரே

அன்பின் சோதரா !

இவ்வுலகில் பிறந்தவர் இறப்பது திண்ணம். வாழ்க்கை என்னும் வட்டத்தில் சிலர் முழுமையாக வாழ்ந்து இறைபதம் அடைகின்றனர். நீங்களோ வாழ்க்கையின் 3/4 பகுதியினை தாண்டிய நிலையில் யாரும் எதிர்பாராத வகையில் எவருக்கும் எந்த செய்தியும் கொடுக்காமல் கனடா போக ஆயத்தம் செய்து விட்டு கடவுளிடம் சென்றுவிட்டீரே.

பாடசாலைக் காலம் தவிர மிகுதிக் காலம் முழுவதையும் கொழும்பு மாநகரிலேயே கழித்த நீங்கள் செய்யும் தொழிலே தெய்வம் என்னும் வாக்கியத்திற்கமைய உங்கள் முழு நேரத்தையும் நீங்கள் கடமையாற்றிய வைத்தியலிங்கம் கம்பனிக்கே உரித்தாக்கினீர்கள். உங்கள் கடமை வீண் போகவில்லை.

நீங்கள் கொழும்பில் இருந்த காரணத்தால் உற்றார், உறவினர் ஊரவர் தங்கள் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு கொழும்பு வந்த போதெல்லாம் தேவியிடம் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கெல்லாம் விரும்பியோ, விரும்பாமலோ நேசக்கரம் நீட்டினீர்கள்.

எனது குடும்பம் கொழும்பில் இல்லாத காலத்தில் எனது ஒவ்வொரு பிள்ளையும் ஒரு சொற்ப காலமாவது தேவியின் அரவணைப்பில் இருக்க நேரிட்டது. அப்போதெல்லாம் உங்கள் பிள்ளைகளைப் போல் அரவணைத்து உதவியதை மறக்க முடியவில்லை. வைத்தியலிங்கம் கம்பனியிலிருந்து ஓய்வு பெற்ற பின் உங்களை நாடி வந்தவர்கள் உங்கள் உதவியை முழுமையாகப் பெறக் கூடியதாக இருந்தது என்பதை பலர் கதைக்க கேள்விப் பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் கல்கிசையில் நீங்கள் சிங்கள சகோதரர்களுடன் அன்பாக பழகி அவர்களின் நன் மதிப்பைப் பெற்றீர்கள் என்பதை உங்களின் இறுதி நாள் பயணத்தின் போது காணக்கூடியதாகவிருந்தது.

பலரின் மரணச் செய்தி என் காதில் விழுந்தது. ஆனால் ஒரு சிலரின் செய்திக்கு மட்டும் என் கண்ணில் நீர் வழிந்தது. இந்தப் பட்டியலில் நீங்களும் ஒன்று. எது எப்படியாயிருந்தாலும் நீங்கள் எந்த வகையிலும் துன்பப் படாமலும், மற்றவர்களுக்கு எந்தவகையிலும் தொல்லைகொடுக்காமல் உங்கள் ஆத்மாவை உங்கள் உடலை விட்டு இறைவனுடன் ஐக்கியப் படுத்திவிட்டீர்கள். இது நீங்கள் செய்த பாக்கியமே. உங்கள் ஒவ்வொரு பிள்ளைகளும் தங்களுக்கு உங்களிடமிருந்து எப்படிப்பட்ட அரவணைப்பு கிடைத்த தென்பதை அவர்கள் உங்களுக்கு செலுத்திய மலர் வளையங்கள் மூலமாக நாங்கள் அறிந்து கொண்டோம். அது மட்டுமல்ல தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைக்காக அவர்கள் எல்லோருடைய பிரசன்னமும் உங்களுக்கு கிடைத்த பெரும் பேறு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

*உடன்பிறவா சகோதரன்*
*செ. இராசரத்தினம்*
*குடும்பம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமுடன் வாழ்க சிந்தனைத் துளிகள்

| | |
|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | தாயும், தந்தையும் |
| வந்தால் போகாதது | புகழ், பழி |
| போனால் வராதது | மானம், உயிர் |
| தானாக வருவது | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | பசி, தாகம் |
| பிரிக்க முடியாதது | பந்தம், பாசம் |
| அழிவைத்தருவது | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும்சமமானது | பிறப்பு, இறப்பு |
| வருவதும் போவதும் | இன்பம், துன்பம் |
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகவும் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | பொறாமை |
| ஆபத்தை விளைவிப்பது | அதிகபேச்சு |
| செய்யவேண்டியது | உதவி |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து எமையெல்லாம் விட்டுப் பிரிந்து இறை பதம் எய்திய எங்கள் குடும்ப தலைவன் அமரர் சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவு கேட்டு எங்கள் இல்லத்துக்கு வந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அன்னாரின் பூதவுடலுக்கு நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம், மாலைகள் சாத்தியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்டவர் களுக்கும், அந்தியேட்டி, சபீண்டிகரண நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் ஆலய குருமார்களுக்கும் இம்மலரினை அழகுடன் அச்சடித்த விகடன் அச்சகத்தாருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

இங்கணம்,<br>
மனைவி<br>
பிள்ளைகள்<br>
மருமக்கள்<br>
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

## Geethacharam

Whatever has happened, has
happened Good
Whatever is happening, is happening
Good
Whatever will happen in the future, will
happen Good
What did you loose?
Why do you cry?
What did you bring to loose?
What did you create to go as waste?
Whatever you took, you took it from
here
Whatever you gave, you gave it here
Whatever is yours today will be
someone else's tomorrow
Another day it will be somebody else's
This is the rule of the World



Vihadan Printer
541/2, Galle Road, Colombo - 06. Tel: 2504370 E -mail : vihadanpr@yahoo.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org